பேருந்தின் அடிச்சட்டம் (Chassis) அசோக் லேலண்ட் கம்பெனியால் தயாரிக்கப்பட்டது. இந்த பேருந்தினை சோதனை ஓட்டமாக இயக்கி பொது மக்களின் விருப்பத்தை அறிந்து தேவைப்பட்டால், இம்மாதிரியான பேருந்துகள் தேவைப்படும் அளவில் விடுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளை அதிக அளவில் இயக்கும் திட்டம்.

436—(*வினா எண். 18709) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் ஈரோடு வரை செல்லும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளைப் போல் மற்ற வழித்தடங்களிலும் விட அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தை இப்போது லாபகரமாக இயக்க அதை மாற்றி அமைக்கக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தில் குறைவான பயணிகளை மட்டும் ஏற்றிக் கொண்டு செல்லக்கூடிய சூழ் நிலையில் அமைக்கப்பட்டு இருப்பதால் அது இப்போது லாபகரமாக இல்லை. எனவே அதிலே ஏற்கெனவே 16 படுக்கைகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதை இப்போது மாற்றி 8 படுக்கைகளாகவும் 16 இருக்கைகளாகவும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அப்படி மாற்றி அமைக்கும் போது அதில் லாபம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற வழித் தடங்களிலும் தூங்கும் வசதி உள்ள பேருந்துகளை விடுவதற்கு ஆலோசனை உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த எந்த வழித் தடங்களில் அப்படி ஆலோசனையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் விடுவது என்பது ஆய்வில் இருக்கிறது. விடலாமா என்பதே ஆய்வில் இருக்கிறது. இந்த இருக்கைகளை மாற்றியதற்குப் பிறகு, அதைப் பார்த்த பிறகுதான் எந்தெந்த வழித்தடங்கள் என்று சொல்ல முடியும். இப்பொழுது சொல்ல முடியாது.

1981—1983 ஆகிய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட பேருந்துகளில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய சாமான்கள்.

437—(*வினா எண். 20406) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் பேருந்துகளில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய சாமான்கள் (Scrap) விற்பனை செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவுக்கு விற்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 2,05,96,723.34-க்கும், 1982-83 ஆம் ஆண்டு ரூ. 2,40,90,877.34-க்கும் பழைய சாமான்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

1983-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள்.

438—(*வினா எண். 20906) திரு. என். வரதராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) 1983-ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை?

(ஆ) உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(இ) காயமடைந்தோர் எத்தனை பேர்?

(ஈ) சாலை விபத்துக்களைத் தடுக்க, கட்டுப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 9,935.

(ஆ) 1,882 பேர்கள்.

(இ) 9,105 பேர்கள்.